அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அரையாண்டுத்தேர்வு

# 2023/2024

# தமிழ்

## ஆண்டு 5

| | |
|---|---|
| **நேரம்: 120 மணித்துளிகள்**<br><br>**நாள்: சனிக்கிழமை** | **மொத்தப்புள்ளிகள்:** 100<br>(எழுதுதல் 85 புள்ளிகள், வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் 15 புள்ளிகள்)<br><br>**பக்கங்கள்:** 10 |
| **பெயர்:** | |
| **தமிழ்ப்பள்ளி:** | |

## பகுதி 1 - எழுதுதல்

**1. மிகப் பொருத்தமான விடையின் முன் உள்ள கூட்டினுள் புள்ளடியிடுக.**

1. சிலப்பதிகாரம் விரிவாகக் கூறும் தமிழரது கலை

☐ போர் ☐ சிற்பம் ☐ ஆடல்

2. அழுக்காறு என்பதன் பொருள்

☐ அழுக்கு ☐ பொறாமை ☐ ஆறு

3. ஔவையார் இயற்றிய அறநூல்களுள் ஒன்று

☐ மூதுரை ☐ நாலடியார் ☐ திருக்குறள்

4. இளமை என்ற சொல்லுக்கு எதிர்ப்பொருட் சொல்

☐ முதுமை ☐ பழைமை ☐ செழுமை

5. மழை + காட்சி என்பதைச் சேர்த்து எழுதினால்

☐ மழைகாட்சி ☐ மழக்காட்சி ☐ மழைக்காட்சி

6. வாறன் என்பதன் திருத்தமான வடிவம்

☐ வந்தேன் ☐ வருவான் ☐ வருகிறேன்

7. அம்மாவும் தம்பியும் அங்காடிக்குச்

☐ சென்றார் ☐ சென்றார்கள் ☐ சென்றன

8. நற்பண்புகளுள் ஒன்று

☐ நன்றி மறப்பது ☐ நன்றி மறவாமை ☐ நன்றி சொல்லாமை

9. தமிழரது பண்பாட்டு அடையாளமாக விளங்குவது

☐ கலை ☐ பணம் ☐ பொருள்

10. விடுகதை: ஒரு வீட்டுக்கு இரண்டு வாயில் அது

☐ முகம் ☐ மூக்கு ☐ கை

11. வினைச் சொல்லுக்கு ஓர் எடுத்துக்காட்டு

☐ படம் ☐ வானம் ☐ பறந்தது

12. ‘நெஞ்சு பொறுக்குதில்லையே’ என்ற பாடலைப் பாடியவர்

☐ பாரதிதாசன் ☐ பாரதியார் ☐ சோமசுந்தரப்புலவர்

13. குளிராடை என்பதைப் பிரித்து எழுதினால்

☐ குளி + ஆடை ☐ குளி + ராடை ☐ குளிர் + ஆடை

14. இளங்கோ அடிகள் ஒரு

☐ துறவி ☐ கணிகன் ☐ வணிகன்

15. தேசியக்கவி எனப் போற்றப்பட்டவர்

☐ இளங்கோவடிகள் ☐ பாரதியார் ☐ திருவள்ளுவர்

16. தாய்மொழி மீது பற்றுக் கொள்வது

☐ நாட்டுப்பற்று ☐ மொழிப்பற்று ☐ உணவுப்பற்று

17. ஆடற் கலையின் தொடக்கம்

☐ கூத்து ☐ காவடி ☐ கும்மி

18. தோற்கருவிகளுக்கு ஓர் எடுத்துக்காட்டு

☐ யாழ் ☐ பறை ☐ குழல்

19. விளையாடினேன் என்பதன் எதிர்காலம்

☐ விளையாடுகிறேன் ☐ விளையாடு ☐ விளையாடுவேன்

20. உயர்திணைக்கு ஓர் எடுத்துக்காட்டு

☐ நடிகன் ☐ பாம்பு ☐ இருக்கை

(20 X 1 = 20 புள்ளிகள்)

**2. தரப்பட்டுள்ள சொல்லியங்களின் எழுவாய், செயப்படுபொருள், பயனிலை ஆகியவற்றைத் தெரிவுசெய்து எழுதுக.**

1. தங்கை நடனத்தை அழகாக ஆடினாள்.
2. குழலி மடமட என்று நீரைக் குடித்தாள்.
3. சிறுவன் விரைவாகக் கட்டுரையை எழுதினான்.
4. இளங்கோ அடிகள் சிலப்பதிகாரத்தை இயற்றினார்.

| | **எழுவாய்** | **செயப்படுபொருள்** | **பயனிலை** |
|---|---|---|---|
| 1. | தங்கை | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | சிலப்பதிகாரத்தை | |

(10 X 1 = 10 புள்ளிகள்)

**3. பொருத்தமான முடிக்கும் சொல்லைத் தெரிவுசெய்து எழுதுக.**

| | | | | |
|---|---|---|---|---|
| தரும் | கொடுத்தார் | விளங்கினர் | கொண்டாடப்படுகிறது | இருப்போம் |

1. தமிழர் ஓவியக் கலையிலும் சிறந்து ______________________________.
2. நாம் உயிர்களிடத்தில் அன்பாக ______________________________.
3. ஒழுக்கம் என்றும் உயர்வைத்______________________________.
4. தைப்பொங்கல் தமிழரால் ______________________________.
5. பாரதியார் பெண் உரிமைக்காகக் குரல் ______________________________.

(5 x 2 = 10 புள்ளிகள்)

**4. தரப்பட்டுள்ள சொற்களை வாழிடமொழியில் மாற்றி எழுதுக.**

1. சிவப்பு ____________________________
2. இருக்கை ____________________________
3. உணவகம் ____________________________
4. கதை ____________________________
5. தேநீர் ____________________________

(5 x 2 = 10 புள்ளிகள்)

**5. அடைப்புக்குறிக்குள் இருக்கும் சொற்களைப் பொருத்தமாக மாற்றி எழுதுக.**

1. நாம் கற்க வேண்டிய ____________________ப் பிழை இல்லாமல் கற்க வேண்டும். (நூல்கள்)

2. நடுகற்கள் தமிழரது ________________________ச் சான்றாகின்றன. (வீரம்)

3. எழிலி _______________________ அங்காடிக்குச் சென்று காய்கறிகளை வாங்கினாள். (அம்மா)

4. அழகான சிற்பங்கள் _________________________ செதுக்கப்பட்டன. (சிற்பி)

5. இன்று ______________________________ தமிழ்த்திறன் போட்டி நடைபெற்றது. (பள்ளி)

(5 X 2 = 10 புள்ளிகள்)

**6. பாடநூல் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. பாரதியார் யாருடைய மேலாண்மையை எதிர்த்தார்?

_____________________________________________________________________________________

2. சிறந்த ஒழுக்கம் பற்றிக் கூறும் அறநூல்களில் ஒன்றின் பெயரை எழுதுக.

_____________________________________________________________________________________

3. மாதவியின் ஆடல் அரங்கேற்றம் எங்கே நடைபெற்றது?

_____________________________________________________________________________________

4. பின்வருவனவற்றுக்கு ஒவ்வோர் எடுத்துக்காட்டு தருக.

உயர்திணை: ___________________________ அஃறிணை: ______________________________

5. முயல்கள் பற்றைக்குள் பாய்ந்து ஓடின. இதை ஒருமைச் சொல்லியமாக மாற்றி எழுதுக.

_____________________________________________________________________________________

_____________________________________________________________________________________

(5 X 2 = 10 புள்ளிகள்)

**7. தரப்பட்டுள்ள தலைப்புகளுள் ஒன்றைத் தெரிவுசெய்து 50 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

1. ஒழுக்கம்
2. செய்தித்தாள்
3. நான் விரும்பும் ஒருவர்

(15 புள்ளிகள்)

## பகுதி 2

## வாசித்தலும் விளங்கிக் கொள்ளுதலும்

**1. பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுமையான விடை எழுதுக.**

எமது தாயகத்தில் வளரும் மரங்களுள் வேப்பமரமும் ஒன்றாகும். வேம்பு மருத்துவப் பண்புகளை உடையது. தமிழர், வேப்பிலைகளை நிலத்தில் பரப்பி அவற்றின் மேல் அம்மை நோய் உள்ளவர்களைப் படுக்க வைப்பர். நோய் பரவாமல் தடுப்பதற்கு வீட்டினுள் வேப்பிலையைக் கட்டித் தொங்க விடுவர். வேப்பம்பூ வயிற்றுப்புழு நோய்க்கு மருந்தாகும். வேப்பம்பூவில் செய்யப்படும் வடகம் சுவையாக இருக்கும். எமது சிற்றூர்களில் வேப்பம் குச்சியால் பல் துலக்கும் வழக்கம் உள்ளது. வேப்பங் குச்சியின் சாறு பற்களை நோயிலிருந்து தடுக்கும். அத்துடன் இது பல் ஈறுகளுக்கும் வலிமை தருகிறது.

1. வேம்பு என்ன பண்புகளை உடையது?

_______________________________________________

_______________________________________________

2. நோய் பரவாமல் தடுப்பதற்கு என்ன செய்வர்?

_______________________________________________

_______________________________________________

3. சிற்றூர்களில் என்ன வழக்கம் உள்ளது?

_______________________________________________

_______________________________________________

4. பற்களை நோயிலிருந்து தடுப்பதற்கு எது உதவுகிறது?

_______________________________________________

_______________________________________________

5. வேப்பம் பூவிலிருந்து என்ன செய்யப்படுகிறது?

_______________________________________________

_______________________________________________

(5 X 2 = 10 புள்ளிகள்)

2. தரப்பட்டுள்ள அறிவித்தலைப் படித்து, அதன் கீழுள்ள கூற்றுகள் சரியாயின் ✓ எனவும் பிழையாயின் × எனவும் அடையாளமிடுக.

## ஓவியப்போட்டி

யாழ். தமிழ்க் கலைப்பள்ளி மாணவர்களுக்கான ஓவியப்போட்டி நடைபெற உள்ளது.

இடம்: யாழ். தமிழ்க் கலைப்பள்ளி மண்டபம்
காலம்: 10.03.2024 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: முற்பகல் 10:00 மணி

| அகவை | பிரிவுகள் |
|---|---|
| 6 - 8 | கீழ்ப்பிரிவு |
| 9 – 11 | நடுவண் பிரிவு |
| 12 - 15 | மேற்பிரிவு |

1. யாழ். தமிழ்க் கலைப்பள்ளி ஓவியப் போட்டியை நடத்துகிறது. ( )
2. அகவை 12-15 வரையுள்ள மாணவர்கள் மேற்பிரிவுக்குள் அடங்குவர். ( )
3. இது ஒரு பிறந்தநாள் அழைப்பிதழ் ( )
4. போட்டி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் ( )
5. போட்டி நடைபெறும் இடம் விளையாட்டுத் திடல் ( )

(5 x 1 = 5 புள்ளிகள்)

# பணியகப் பயன்பாட்டுக்கு மட்டும்

| வினா எண் | புள்ளிகள் | முதலாம் முறை | இரண்டாம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| **எழுதுதல்** | | | | |
| 1 | 20 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 10 | | | |
| 6 | 10 | | | |
| 7 | 15 | | | |
| **வாசித்தலும் விளங்கிக் கொள்ளுதலும்** | | | | |
| 1 | 10 | | | |
| 2 | 05 | | | |
| | மொத்தப் புள்ளிகள் | | | |

| | முழுப்பெயர் | கையொப்பம் |
|---|---|---|
| முதலாம் முறை | | |
| இரண்டாம் முறை | | |
| மேற்பார்வையாளர் | | |